27.01.2017

தினமணி

**புதுச்சேரியில் மிதமான மழை: பொதுமக்கள் மகிழ்ச்சி**

தெற்கு மேற்கு வங்ககடலில் உருவாகி உள்ள குறைந்த காற்றழுத்ததாழ்வு நிலை காரணமாக புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் விட்டு விட்டு மிதமான மழை பெய்து வருகிறது.

தெற்கு மேற்கு வங்ககடலில் உருவாகிவுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியில் மழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்திருந்தது.

அதன்படி புதுவையில் விட்டு விட்டு மிதமான மழை பெய்து வருகிறது. மேலும் காலை முதலே நகரின் பல்வேறு பகுதிகளில் மழை விட்டுவிட்டு பெய்து வருகிறது.

மேலும் காற்றுடன் கூடிய துரலும் தொடர்ந்து சாரல் மழையும் பெய்து வருவதால் குளிர்ச்சியான சூழ்நிலை நிலவிவருகிறது. புதுச்சேரியின் கடற்கரை சாலை, அண்ணா சாலை , நேரு சாலை உட்பட நகரின் முக்கிய பகுதிகளில் சாரல் மழை தொடர்ந்து பெய்து வருகிறது.

**கிராமப்புறங்களிலும் மழை**

இதே போல் கிராமப்புறங்களான கிருமாம்பாக்கம், பாகூர், திருபுவனை, மண்ணாடிப்பட்டு பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. இரண்டு நாட்களுக்கு மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சாரல் மழையுடன் அவ்வவ்போது குளிர்ந்த காற்று வீசிவருவதால் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கடலோர மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வுமையம் அறிவிப்பு

**சென்னை:** தென்மேற்கு வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள புதிய காற்றத்தழுத்தத் தாழ்வுநிலை காரணமாக தமிழக கடலோர மாவட்டங்களில் இன்று வெள்ளிக்கிழமை மிதமான மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்த மையத்தின் இயக்குநர் எஸ்.பாலச்சந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:
தென்மேற்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை, புதன்கிழமை குமரிமுனையில் நிலை கொண்டிருந்தது. அது வியாழக்கிழமை மாலத்தீவுகள் நோக்கி நகர்ந்தது. இதனால் தமிழக கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியில் பல இடங்களில் இன்று வெள்ளிக்கிழமை மிதமான மழை பெய்யும். ஆங்காங்கே கனமழை பெய்யவும் வாய்ப்புள்ளது. உள்மாவட்டங்களிலும் ஒருசில இடங்களில் மழை பெய்யும்.

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். கடந்த 24 மணி நேரத்தில் திருவாரூர், நாகையில் தலா 20 மி.மீட்டரும், நெல்லை மாவட்டம்

பாபநாசத்தில் 10 மில்லி மீட்டரும் மழை பதிவாகியுள்ளது என்றார் அவர்.

இந்நிலையில் தமிழகத்தில் திருச்சி, கும்பகோணம், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை பெய்துள்ளது. சென்னையில் சைதாப்பேட்டை, வடபழனி, தேனாம்பேட்டை, தி.நகர் உள்ளிட்ட இடங்களில் பரவலாக மழை பெய்தது. கடலூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து சிறிது மிதமான அளவு மழைபெய்து வருகிறது. இதேநிலை தற்போதும் நீடித்துவருவதால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணிநேரத்துக்கு மிதமான மழை வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சிலநாட்களாக கடும் குளிருடன், அவ்வப்போது சாரல் மழையும் பெய்து வருகிறது. சுற்றுலாத்தலமான கொடைக்கானலில் அனைத்துப் பகுதிகளும் பனிமூட்டம் சூழ்ந்து ரம்மியமாக காட்சியளிக்கும் நிலையில், இடைஇடையே சாரல் மழையும் பெய்து வருவது சுற்றுலாப் பயணிகளை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.

**தஞ்சை, நெல்லையில் பரவலாக மழை: மக்கள் மகிழ்ச்சி**

தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையால், தமிழகத்தில் தஞ்சை, நெல்லை, கொடைக்கானல் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

கடந்த ஆண்டு, தஞ்சை மற்றும் நெல்லைப் பகுதிகளில் போதிய மழை இல்லாமல், விவசாயம் பாதிக்கப்பட்டது.

தொடர்ந்து கடும் வறட்சி நிலவி வந்த நிலையில், வடகிழக்குப் பருவ மழை காலம் முடிந்த நிலையில் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது.

இதனால், பெரிய அளவில் குடிநீர் பற்றாக்குறை தீராது என்றாலும், பொய்த்துப் போன விவசாயத்துக்கு எந்த பயனும் அளிக்காது என்றாலும், கடுமையான வறட்சி நிலை மாறும் என்பதால் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.